Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஐப்பசி 5 ஆம் நாள் ஐ. அகிர் பிறை 14 (21-10-64) புதன்கிழமை இதழ் 252




# சீன அணுகுண்டால் இலங்கைக்கு ஆபத்து

## கதிரியக்க விளைவு குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ச்சி

(நமது விசேஷ நிருபர்)

கொழும்பு, செவ்வாய்

**கடந்த வாரத்தில் கம்யூனிஸ்ட் சீனு வெடித்த அணுகுண்டினுல், இலங்கைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்ந்து கண்டுபிடிப்பதில் இலங்கை விஞ்ஞானிகள் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர். சீனு வெடித்த அணுகுண்டின் கதிரியக்கங்கள் இங்கும் விழுந்திருக்கின்றனவா என்பதைக் கண்டு பிடித்து தமது முடிவை விஞ்ஞானிகள் அரசாங்கத்துக்குத் தெரிவிப்பார்கள்.**

சீனு வெடித்த அணுக்குண்டின் கதிரியக்கங்கள் ஆசிய பிராந்தியத்தில் அநேகமான நாடுகளில் விழுந்ததாகவும் அதுபற்றி ஆராயப்பட்டு வருவதாகவும் இங்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்செய்தியை ஆதாரமாகக் கொண்டே இலங்கையிலும் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

சீனுவின் அணுகுண்டு வெடித்ததினுல் ஏற்பட்ட கதிரியக்கங்கள், அமெரிக்காவரை பரவி இருப்பதாகவும், செய்திகள் கூறுகின்றன. கதிரியக்கங்கள் ஜப்பானில் விழுந்திருப்பது ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியா பாகிஸ்தான் முதலிய ஆசிய நாடுகளிலும் கதிரியக்கம் பரவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காற்ருேட்டத்தைப் பொறுத்த இக்கதிரியக்கப் பரவல் இருக்குமென்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இலங்கை விஞ்ஞானிகளும் இதே அடிப்படையில் ஆராய்ச்சி நடத்துவதில் முனைந்துள்ளனர். இலங்கையிலும் கதிரியக்கம் காணப்படுமாணுல், சீன அரசாங்கத்துக்கு இலங்கை வன்மையான ஆட்சேபம் தெரிவிக்கும் என்று அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன.

## பி. பி. ஸி. போல் நடைபெறும்
### பிரதமர் விளக்கம்

லண்டன், அக். 20

"லேக்ஹவுஸ் பத்திரிகைகளை அரசாங்கம் பொறுப்பேற்று கூட்டுஸ்தாபனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டபின் அது பிரிட்டிஷ் ஒலிபரப்பு ஸ்தாபனத்தைப்போன்று சுதந்திரமாக இயங்கும்" என்று இலங்கைப்பிரதமர் திருமதி சிறிமாபண்டாரநாயகா நேற்று இங்கு காமன்வெல்த் பத்திரிகையாளர் சங்கத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

ரயில் விபத்து

## பிரதமர் ஸ்ரீமா அனுதாபம்

லண்டன், அக். 20

மீரிகம ரயில் விபத்து குறித்து அனுதாபம் தெரிவித்து இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா லண்டனிலிருந்து விசேஷ செய்தியொன்று அனுப்பியுள்ளார். "கோரரயில் விபத்தில் மாண்டவர்களின் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் சுகமாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்று பிரதமர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## நெடுஞ்செழியன் விடுதலை

சென்னை, அக். 20

சென்னை சட்டசபையில் திராவிட முன்னேற்றக்கட்சித் தலைவரான திரு. இரா. நெடுஞ்செழியன் இன்று காலை கோயமுத்தூர் சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பட்டார். இந்தி எதிர்ப்புப்போராட்டத்தில் மறியல்செய்தது காரணமாக அவருக்கு 3 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

## யாழ்ப்பாணத்துக்கு 'ஸ்ரீ' பஸ்கள்
### நாளை வருகின்றன

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்துக்கு நாளை சில ஸ்ரீ பஸ்கள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை 4 இரண்டு தட்டு பஸ்கள் வரும் என்றும் அறியப்படுகிறது. இந்த பஸ்களை இங்கு கொண்டுவருவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து "டபிள் டெக்கரை" செலுத்தக்கூடிய சாரதிகள் கொழும்புசென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு ஸ்ரீ பஸ்கள் வருவதை எதிர்ப்பதில், தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

## எதிர்க்கட்சியினர் உண்ணாவிரதம்

சென்னை, அக். 20

தமிழ்நாடு ராஜ்ய கீழ் சட்டசபை எதிர்க்கட்சியினர் உணவுநிலைமையை எதிர்த்து நாளை புதன்கிழமை 11 மணிநேரம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

கிரிக்கெட் டெஸ்ட்

## ஆஸி —1:143
### ஆட்டம் நாளை முடிவடைகிறது

கல்கத்தா, அக். 20

இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே நடைபெறும் இறுதி டெஸ்ட்டின் மூன்ருவது நாளான இன்று, இந்தியா தனது முதலாவது இன்னிங்ஸில் 235 ஓட்டங்கள் எடுத்திருக்கிறது. இதன் பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடத் தொடங்கிய ஆஸ்திரேலியா, ஆட்டநேரம் வரை ஒரு விக்கட் நஷ்டத்துக்கு 143 ஓட்டங்கள் எடுத்துள்ளது. முதலில் ஆடத் தொடங்கிய சிம்ஸன் 71 ஓட்டங்களைப் பெற்று சூர்த்தியின் பந்து வீச்சினுல் ஆட்டமிழந்தார். லாரி 47 ஓட்டங்களுடனும் கௌவுப்பர் 14 ஓட்டங்களுடனும் நாளை தொடர்ந்து விளையாடுவர்.

இந்தியா-ஆஸ்திரேலியா டெஸ்ட் வியாழக்கிழமையுடன் முடிவடைகிறது. உலகின் கிரிக்கெட் ரசிகர்களின் கண்ணேட்டம், இப்பொழுது இந்த டெஸ்ட்டிலே தான் திரும்பியிருக்கிறது.

## துப்பாக்கி மட்டும் காணுமல்போனது

கொள்ளுப்பிட்டி, செவ்.

சென்ற சனிக்கிழமை காலை மீரிகமத்துக்கு அருகில் ரயில் விபத்துக்குள்ளானபோது அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த 80 பொலிஸ் காரர்களில் ஒருவருடைய துப்பாக்கிமட்டும் காணுமல்போய் விட்டதாகத்தெரிகிறது.

## டாக்ஸி சாரதிகள் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண டாக்ஸி கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தின் கூட்டம் நேற்று மாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வை. சி. சி. கு. சிவானந்தம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் சங்கத்தின் சிறப்பு அம்சங்கள் பற்றி தலைவர் எடுத்துக்கூறினர். சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவும் நடைபெற்றது.

## அரபுநாட்டுக்கு தமிழ்நாட்டு வாழைப்பழம்

சென்னை, அக். 20

அரபுநாடுகளுக்கு தமிழ்நாட்டிலிருந்து வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்வதுகுறித்து இப்பொழுது ஆராயப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலிருந்து வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்வதை ஆராய கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது.

## மேலும் மாற்றம்?

வாஷிங்டன், அக். 20

சோவியத்யூனியனின் தலைமைப்பீடத்தில் மேலும் பல மாற்றங்கள் நிகழலாம் என்று அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 17வது தங்கமெடல்

டோக்கியோ, அக். 20

டோக்கியோ ஒலிம்பிக்கில் இன்று ரஷ்யா 17வது தங்க மெடலைப் பெற்றது.

மலிவு விற்பனையோ—
—இல்லையோ!!!
எங்கள் விலைகள் எப்பொழுதும் சகாயமானதே.
உங்கள் தீபாவளி தேவைகளுக்கு
உகந்த
ஜவுளி மாளிகை
டயரும்ஸ்
யாழ்ப்பாணம்.

சைலால்




முகப்பரு, சொறிசிரங்கு கரப்பான், கக்கூஸ்பத்து, வெட்டுக்காயம், வேனல் கட்டி, தீப்பட்டபுண், சேத்துப்புண், பித்தவெடிப்பு முதலிய சரும வியாதிகளைக் குணப்படுத்துகிறது. துணிகளில் கறைபிடிக்காது

தயாரிப்பவர்கள் "ராதா புறடக்ஸ்"

எஸ். சுப்பிரமணியம் அன் கோ.
55, கே. கே. எஸ். றோட்
யாழ்ப்பாணம்.

மணிவாக்கு

ஒரு நாட்டின் நன் மக்கள் சும்மாயிருப்பதை விடத் தீமையின் வெற்றிக்கு உதவுவது வேறெதுவுமில்லை.

— எட்மண்ட்பர்க்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஐப்பசி மீ 5 உ (21-10-64)

## அமைதிக்கு வழியல்ல

அரசாங்க சேவையிலுள்ள தொழில்நுட்ப ஊழியர்களும் சில்லறை ஊழியர்களும்கூட இனி சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென்றும் அவர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்ட சலுகைகள் ரத்துச் செய்யப்படவிருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இதே சமயம் தமிழரசுக்கட்சியின் செயற்குழு தமிழ்மொழிக்கு உரிமை அளிப்பது சம்பந்தமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததற்குக் கவலை தெரிவித்திருப்பதுடன் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் மோசமான நிலைமை தோன்றக்கூடுமெனவும் ஒரு தீர்மானத்தின்மூலம் எச்சரித்துள்ளது. நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் விரும்பும் மக்களுக்கு அரசாங்கத்தின் செயலும் தமிழரசுக்கட்சியின் எச்சரிக்கையும் நிச்சயம் கவலையளிக்கும்.

மொழிப்பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணப்படுமென்றும் சிறுபான்மையினருக்கு அநீதி விளைக்கப்படமாட்டாதென்றும் பிரதமரும் அரசாங்கமும் அடிக்கடி வாக்குறுதியளித்துக் கொண்டு அதேசமயம் தன்னிச்சைப்படி உத்தியோகமொழி அமுலைத் தீவிரமாக்கி சிறுபான்மை இனத்தவருக்கு நியாயம் கிடைக்காமல் செய்து கொண்டிருப்பதைக் கண்டு தமிழரசுக்கட்சி கவலை கொள்வதில் நியாயமில்லாமலில்லை. தமிழ்பேசும் மக்களுக்கு மொழி மற்றும் உரிமைகள் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்து அவர்களின் ஆதரவைப் பெற்றது தமிழரசுக்கட்சி. தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக ஒவ்வொரு தடவையும் போராட்டம்நடத்தத்திட்டமிட்டபோதெல்லாம் அரசாங்கம் வாக்குறுதியளித்து அத்திட்டத்தை ஒத்திவைக்கச் செய்துள்ளது. அரசாங்கம் தனது வாக்குறுதிகள்பற்றிக் கவலைப்படாதது மட்டுமன்றி தமிழ்பேசும் மக்களோ அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழரசுக்கட்சியோ இந்நாட்டில் இருப்பதாகவே காட்டிக் கொள்ளாமல் காரியங்கள் செய்துவருவது தமிழரசுக்கட்சிக்கு மட்டுமல்ல தமிழ்பேசும் மக்களுக்கே ஆத்திரமூட்டுவதாகும்.

கூட்டுஅரசாங்கம் பதவியேற்றதும் தமிழ்பேசும் மக்கள், தங்களுக்கு ஓரளவாவது உரிமை கிடைக்குமென நம்பிக்கை கொண்டனர். கூட்டு அரசாங்கத்தின் ஆரம்பச் செயல்களும் இந்த நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தின. ஆனால் நாளாக நாளாக தமிழ்பேசும் மக்கள் தங்களுக்கிருந்த நம்பிக்கையையும் இழந்து வருகின்றனர். தமிழ்பேசும் மக்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்துக்கு உண்மையாகவே இருக்குமானால் தமிழ்பேசும் மக்களைப் பாதிக்கக்கூடிய முறையில் உத்தியோக மொழிச்சட்ட அமுலைத் தீவிரப்படுத்தமாட்டாது. பத்திரிகை மசோதாவையும், பத்திரிகைக் கூட்டுஸ்தாபன மசோதாவையும் அவசர அவசரமாகத் தயாரித்து, பார்லிமெண்டில் சமர்ப்பிக்கவும் அரசாங்கத்துக்கு ஆற்றலும் அக்கறையும் இருக்குமானால் ஆறு வருடங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி (விசேஷவிதிகள்) உபயோகச் சட்டத்துக்கான ஷரத்துக்களை காலஞ்சென்ற பிரதமரின் பெயரால் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கலாம். இதன்மூலம் தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்கி நாட்டின் முன்னேற்றத்துக்கு அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்பேசும் மக்கள் இந்நாட்டிலிருக்கிறார்களென்பதை ஒப்புக் கொள்ளவோ அவர்களுக்கென ஒரு மொழி இருப்பதை ஏற்றுக் கொள்ளவோ அரசாங்கம் தயாராக இல்லையென்பதையே அதன் நடவடிக்கைகள் காட்டுகின்றன. அரசாங்கம் இனியும் இதே நடவடிக்கையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்குமானால் நிச்சயம் அது நாட்டின் அமைதிக்கு வழிவகுக்காது. மொழிப்பிரச்னைக்குச் சுமுகமான ஒரு தீர்வு காணப்படும்வரைக்கும் உத்தியோக மொழித் தேர்ச்சி பற்றி இதுவரை அளிக்கப்பட்ட சலுகைகளைத் தொடர்ந்து அளிக்கவும் உத்தியோக மொழி அமுலைத் தீவிரமாக்காமலும் நடவடிக்கை எடுக்க வேண்டியது உத்தியோக மொழிபற்றிய மந்திரிசபை உபகுழுவின் கடமையாகும்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் தமிழரசுக்கட்சி ஆத்திரமடைவது நியாயம்தான் என்றாலும் வெறும் தீர்மானங்களிலும் அறிக்கைகளிலும் மேடைப் பேச்சுக்களிலும் ஆத்திரத்தைக் காட்டுவதால் தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகளோ, நன்மைகளோ கிடைத்துவிடாது. இனியும் தாமதம் செய்யாது நிர்மாணத்திட்டம் வகுத்து தமிழ்பேசும் மக்களின் எதிர்கால வாழ்வுக்கான முயற்சிகளில் தமிழ் அரசுக்கட்சி ஈடுபட வேண்டும். அதுவே பயன்தரும்.

## ஆசிரிய கலாசாலையில் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், செவ். பலாலி ஆசிரிய கலாசாலைக் கைப்பணிப்பகுதியைச் சேர்ந்த ஆசிரிய மாணவ மாணவிகளால் ஒழுங்குசெய்யப்பட்ட மரவேலைச் சித்திரக் கைப்பணிப் பொருட்காட்சியொன்று சென்ற வாரம் அக்கலாசாலையில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

வடபகுதியில்

# எட்டுக் கல்லூரிகளுக்கு நிரந்தர அதிபர் நியமிக்கப்படுவர்
## ஆசிரியர் சங்க தூதுகோஷ்டிக்கு வித்தியாதிபதி வாக்குறுதி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பகுதியில் தற்போது தற்காலிக அதிபர்களைக் கொண்ட எட்டுக் கல்லூரிகளுக்கு, விரைவில் நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது. நிரந்தர அதிபர்களாக நியமிக்கக் கூடியவர்களை பொதுச் சேவைக் கமிஷன் தேர்ந்தெடுக்குமென்றும், அவர்களுக்கு கல்லூரிகளை ஒதுக்கும் வேலையை வித்தியாதிபதி செய்வார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வித்தியாதிபதி திரு. ஈ. எச். டி' அல்விஸை வடமாகாண ஆசிரியர் சங்கம் சென்றவார இறுதியில் பேட்டிகண்டது. வடமாகாண ஆசிரியர் சங்கம் செய்துவரும் சேவைகள் பற்றி பேட்டியின் ஆரம்பத்தில் சங்கத் தலைவர் திரு மு. பேராயிரவர் எடுத்துரைத்தார். வடமாகாணத்தில் எட்டுக் கல்லூரிகளில் நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்படவில்லையென்றும் அக்கல்லூரிகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிக்குமாறும் பேட்டியின் போது கோரப்பட்டது. அதற்கு இணக்கம் தெரிவித்து அதிபர்களாக நியமிக்க தகுதி பெற்றவர்களை பொதுச் சேவைக் கமிஷன் நியமிக்கும் எனவும் கல்வி இலாகா அவர்களுக்கு கல்லூரிகளை ஒதுக்குமெனவும் திரு. அல்விஸ் தெரிவித்தார். பேட்டியின்போது வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளில் சில பின்வருமாறு:-

1975-ம் ஆண்டுக்கு முன்னர் பயிற்சிபெறாத சகல ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படல் வேண்டும்.

ஏனைய அரசாங்க ஊழியரைப் போன்ற இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் ஆசிரியர்களுக்கும் அமைதல் வேண்டும்.

அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கும் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் இரு வேறான மூப்பு அட்டவணை தயாரிக்கப்பட்டு அதன்படியே பதவிஉயர்வும் மாற்றங்களும் நடைபெறல்வேண்டும்.

கல்வி ஆலோசனைச்சபை, மாற்றச் சபை, நியமனச்சபை, தேர்வுச் சபை ஆகிய வற்றில் ஆசிரியர் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கவேண்டும்.

நடைமுறையிலுள்ள கூட்டுச் சபை கலைக்கப்பட்டு புதியதொரு 'கூட்டுச்சபை' உருவாக்கப்படல் வேண்டும்.

## சிங்களத்தில் மாதிரிப்படம்
### வழக்கறிஞர் ஆட்சேபம்

வான்-மோட்டார் சைக்கிள் விபத்து வழக்கு ஒன்று நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ரூபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாதிரிப்படம் வரைபவர், மாதிரிப்படத்தின் விபரங்களை சிங்களத்தில் சமர்ப்பித்தார்.

மாதிரிப்படத்தின் விபரங்கள் சிங்களத்தில் இருப்பதை எதிர்தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. வே. கனகசபை ஆட்சேபிப்பதாக மாஜிஸ்டிரேட்டிடம் தெரிவித்தார். வேறு காரணங்களுக்காக இவ்வழக்கில் எதிரியை மாஜிஸ்டிரேட் விடுதலைசெய்தார். வழக்காளி தரப்பில், சாவகச்சேரி பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. மகாலிங்கம், வழக்கறிஞர் திரு. பாலகிருஷ்ணனின் உதவியுடன் வழக்கை நடத்தினர்.

## ஹூவரின் நிலை அபாயம்

நியுயோர்க், அக். 20

90 வயதான முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஹெர்பர்ட் ஹூவர் கடுமையாக சுகவீனமுற்றிருக்கிறார் என்றும், அவரது நிலைமை அபாயகரமாய் இருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

## தீவுப்பகுதியில் குடிதண்ணீர் கஷ்டம்

ஊர்காவற்றுறை, செவ்.

காலமழை பெய்யத் தவறியதால் தீவுப்பகுதியில் பல இடங்களில் குடி தண்ணீருக்காக மக்கள் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள்.

சரவணை, ஊர்காவற்றுறை, கரம்பன், புங்குடுதீவு ஆகிய இடங்களில் உள்ள மக்களே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஊர்காவற்றுறை பட்டினசபை மக்களின் குடிதண்ணீர் பஞ்சத்தை போக்க மான்யம் வழங்க வேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்தி கேட்டும் இதுவரை எதுவும் நடைபெறவில்லை.

## இலங்கை பிரதமருக்கு வில்ஸன் விருந்து

லண்டன், அக். 20

நவீன பிரிட்டனை உருவாக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் மேதைகள் ஒத்துழைக்க வேண்டும் என பிரதமர் திரு. ஹரேல்ட் வில்ஸன் கேட்டுக்கொண்டார். திரு. வில்ஸன் தன் மந்திரி சபையில் 2 விஞ்ஞானிகளையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

திரு. வில்ஸன் நேற்று தன் மந்திரி சபையின் முதலாவது கூட்டத்தை நடத்தினர்.

நேற்று அவர் இலங்கை பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகாவுக்கு ஒரு விருந்தளித்தார்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

திட்டத்தை உருவாக்கவேண்டும். இழந்த கல்வித் தரத்தை நம் குழந்தைகள் பெற வழி செய்யவேண்டும். அரசாங்கம் கவனிக்குமா?

புலவர், தமிழ்மாறன்.
கோப்பாய்.

***

## பஸ் நிறுத்துமிடம்

காங்கேசன்துறை வீதிக்கு அப்பால் வண்ணார்பண்ணையில் இருந்து செல்லும் பாதைகளுக்கு பஸ் நிறுத்துமிடம் என்ற அறிவிப்புப் பலகை போடப்படாதிருக்கிறது. இதனால் அப்பாதைக்குப் புதிதாக வரும் இ. போ. ச. சாரதிகள் பஸ் நிறுத்த வேண்டிய இடங்களை அறியாது பஸ்ஸை செலுத்திச்செல்கிறார்கள். பிரயாணிகள் இறங்குவதற்கு அடையாளமாக மணியை அடித்தாலும் அது சாரதிகள் செவிக்கு கேட்பதில்லை. பிரயாணிகள் உரிய இடத்தில் இறங்கமுடியாது கஷ்டப்படுகிறார்கள். இதனை இ. போ. ச. அதிகாரிகள் கவனித்து பஸ் நிறுத்தவேண்டிய இடங்களில் பஸ் நிறுத்துமிடம் என்ற அறிவிப்புப்பலகையை நாட்டவேண்டும்.

ப. சோமசுந்தரம்,
வண்ணார்பண்ணை

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## உயர்ந்த கல்வித் திட்டம்

ஆரம்ப காலத்திலே கல்வி திண்ணைப் பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு நூலையும் மாணவர்கள் இவர்களிடம் முறையாகக் கற்று வந்தனர். இந்த மாணவர்களிலுள்ள அறிவு, நுணிப்புல் மேயும் இக்கால மாணவர்களிடம் இருக்கிறதோ என்பது ஐயத்திற்குரியதே.

ஆங்கிலேயர் பள்ளிக்கூடங்களை உண்டாக்கினர்கள். ஆசிரியர் இவ்வளவு நேரம் கற்பிக்க வேண்டும். மாணவர்கள் இவ்வளவு நேரம் கற்கவேண்டும். அந்த வேளைகளில் மாணவர்களை எந்த வேலைகளுக்கும் ஏவக் கூடாது. என்ற சட்டதிட்டங்களை உண்டாக்கினர்கள். இதனால் கற்கும் மாணவர் எண்ணிக்கை அதிகமாகியது. சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே ஆசிரியர்களின் சம்பள ஏற்றமும் இருந்தது. அதனால் ஆசிரியர்களும் அதிக கவனமெடுத்துக் கற்பித்தனர். படித்தவர்களுக்கெல்லாம் வேலை கிடைத்ததால் மாணவர்களும் ஊக்கத்துடன் படித்தனர். பரிசோதகர்கள் திடீரெனப் புகுந்து மாணவர்களைக் கேள்விகள் கேட்டு ஆசிரியர்களுக்கு எச்சரிக்கை விடுத்தவண்ணம் இருந்தனர். இக்காரணங்களால் ஆசிரியர் உலகம் விழிப்புடன் செயலாற்றியது.

இனிப் பாடத்திட்டங்கள் கூட அவர்கள் காலத்தில் உயர்ந்த நிலையிலேயே இருந்தன. ஆங்கிலம் படிக்க விரும்புபவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே ஒரு பாடம் தாய்மொழியிலும் ஏனைய பாடங்கள் ஆங்கிலத்திலும் கற்பிக்கப்பட்டு வந்தன. அவ்வண்ணமே தாய்மொழியில் கற்பவர்களுக்கு உயர்ந்த பாடங்களே ஆரம்ப முதல் கற்பிக்கப்பட்டு வந்தன. எனவே அந்த மாணவர்கள் அந்த மொழிகளில் திறமை பெற்றனர்.

இன்று, இலங்கையின் கல்வி நிலை உயர்வதற்குப் பதிலாகத் தாழ்ந்து கொண்டு போகிறது. எவ்வளவு வேகமாக முன்னேற வேண்டுமோ அவ்வளவு வேகமாகப் பின்னேறுகிறது. ஆசிரியர்களுக்கு ஊதியம் அதிகம். தேர்வுகளில் மாணவர்கள் தேறினலென்ன, தேருவிட்டாலென்ன வகுப்பேற்றி விடலாம்; இன்ஸ்பெக்டரும் அறிவித்தல் கொடுத்த பின் வருவார்; ஏடுகளைப் புரட்டுவார்; கையெழுத்திடுவார்; அவ்வளவோடு அவர் கடமைசரி.

இனிப் பாடத்திட்டங்கள் அமைச்சர்களின் வாக்குறுதி போல் அடிக்கடி மாறுகின்றன, மாற்றப்படுகின்றன. சுயபாஷைத்திட்டமென்றுசொல்லி எல்லாப் பாடங்களையும் சொந்த மொழியாக்கினர்கள். ஆங்கில எஸ். எஸ். ஸி., தமிழ் எஸ். எஸ். ஸி. இரண்டையும் ஒன்றாக இணைத்தார்கள். இரண்டின் தரத்தையும் குறைத்தார்கள். இத்திட்டங்களின் விளைவு எங்கள் வாலிபர்கள் ஆங்கில அறிவை இழந்தார்கள்! உயர்ந்தபடிப்பை இழந்தார்கள்! உயர்ந்த உத்தியோகங்களை இழந்தார்கள்!

இப்பொழுது எஸ். எஸ். ஸி.க்கு ஆங்கிலம் வேண்டும் என்கிறார்கள், ஆங்கிலம் சித்தி அடைந்தால் தான் ஆசிரியராக எடுபடலாம் என்கிறார்கள். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படலாம் என்கிறார்கள். இவ்வாறு கல்வித் திட்டங்களை அடிக்கடி மாற்றுவதால் பாதிக்கப்படுவது இவர்களல்ல; ஆசிரியர்களுமல்ல; எங்கள் மாணவர் உலகமே!

நாளுக்கொருதிட்டம் எனத் திட்டங்களை உருவாக்காமல் ஈழத்துச் சான்றோர்களை அழைத்து அவர்களோடு கலந்தாலோசித்து உயர்ந்த கல்வித்

4-ம் கலம் பார்க்க

# 'ரஷ்ய உள்நாட்டு, வெளிக்கொள்கையில் மாறுதல் இல்லை

## மேற்கு நாடுகளுடன் ஒற்றுமை, ஐ. நா. வை பலப்படுத்துதல் எங்கள்கொள்கை'

### பிரஸ்னேவ், கோஸிஜின் அறிவிப்பு

மாஸ்கோ, அக்: 20

**கடந்த 8 ஆண்டுகளாக உருவாக்கப்பட்டுவந்த ரஷ்யாவின் உள் நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையில் எவ்வித மாறுதலும் இருக்காது என சோவியத் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு. பிரஸ்னேவ் அறிவித்தார். சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் இதை ஆமோதித்தார்.**

ரஷ்யாவின் புதிய வான் வெளிப்பிரயாணிகள் மூவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையிலேயே இருதலைவர்களும் இவ்வாறு கூறினர்.

சமாதானத்துடன் உடனிருந்து வாழும் கொள்கையே மேற்கொள்ளப்படும் என்றும் ஐரோப்பிய பாதுகாப்பு தீவிரப்படுத்தப்படும் என்றும் ஆயுதப் போட்டியைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினர். அமெரிக்கா உள்ளிட்டு மேற்கு நாடுகளுடன் தொடர்ந்து ஒற்றுமையை ஏற்படுத்தவும் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் ரஷ்யா முயற்சி மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினர்.

உலக கம்யூனிஸ்ட் கட்சிகளின் மகாநாடு ஒன்றைக் கூட்டுவது அவசியம் என்றும் பிரஸ்னேவ் தெரிவித்தார்.

பின் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பிரதமர் கோஸிஜின் பேசுகையில், கட்சித் தலைவர் பிரஸ்னேவ் கூறியதைத் தாம் ஆதரிப்பதாயும் நடைமுறை சாத்தியமான ஆயுதப் பரிகரணம், பேச்சுவார்த்தைமூலம் நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பது ஆகியன ரஷ்யாவின் கொள்கையாக இருக்குமென்றும்குறிப்பிட்டார்

திரு. பிரஸ்னேவ் தனது பேச்சில் ஐ நா.வை வலுவாக்கும் முயற்சியை ரஷ்யாகடைப்பிடிக்கும் என்றும் கம்யூனிஸ்ட் இயக்கத்திலுள்ள சிரமத்தை அகற்றுவதில் அது பணிபுரியும் என்றும், சமாதான அடிப்படையில் கம்யூனிஸ்ட் நாடுகளின் ஒற்றுமையை உருவாக்க முயலும் என்றும் குறிப்பிட்டார்.

ரஷ்யா தனது பாதுகாப்பை பலப்படுத்தும் என்று பிரதமர் கோஸிஜின் கூறினர். சீனவுடனுள்ள பிளவை அகற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் ரஷ்யத் தலைவர்கள் கூறினர்கள்.

---

## அமெரிக்க உதவி

வாஷிங்டன், அக். 20

40 கோடி டலர் மதிப்புள்ள உணவுப்பொருட்களை அமெரிக்கா இந்தியாவுக்கு அனுப்பவிருக்கிறது.

---

## வெள்ளிக்கிழமை இறுதி ஹாக்கி

டோக்கியோ, அக். 20

வருகிற வெள்ளிக்கிழமை டோக்கியோ ஒலிம்பிக்கில் இறுதி ஹாக்கிப்போட்டி நடைபெறும். இதில் தங்க மெடலைப்பெறுவது இந்தியாவா பாகிஸ்தானா என ஹாக்கிப் பிரியர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிருர்கள்.

---

## கோர்டனுக்கு கனடா அழைப்பு

ஒட்டாவா, அக். 20

கனடிய வெளிநாட்டு மந்திரி, அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருக்கும் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி கோர்டன் வாக்கரை ஒட்டாவா வரும்படி அழைத்திருக்கிருர். பிரிட்டிஷ் பிரதமர் வில்சனைச் சந்திக்கத்தாம் ஆவலாய் இருப்பதாக கனடிய பிரதமர் லெஸ்டர்பியர்ஸனும் விருப்பம்தெரிவித்திருக்கிருர்.

---

## துருக்கி வெளிநாட்டு மந்திரி மாஸ்கோ செல்வார்

மாஸ்கோ, அக். 20

ரஷ்ய வெளிநாட்டு மந்திரி குரோமிகோவின் அழைப்பின் மீது துருக்கி வெளிநாட்டு மந்திரி மாஸ்கோவுக்கு விஜயம் செய்யவிருக்கிருர்.

---

## பெல்கிரேட் தினம் ரத்தாகியது

பெல்கிரேட், அக். 20

நேற்று ரஷ்யாவில் பாதுகாப்பு மந்திரி தலைமையில் பெல்கிரேட்வந்ததூதுகோஷ்டி, விமானவிபத்தில் மாண்டுவிட்டதால் பெல்கிரேட்டின் 20வது விடுதலை விழாக் கொண்டாட்டங்கள் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

---

## 'அணுகுண்டு தற்பாதுகாப்புக்கே'

### ஜப்பான் பிரதமருக்கு சீன பிரதமர் செய்தி

பீகிங், அக். 20

சீனப்பிரதமர் சூ-என்-லாய் ஜப்பானியப் பிரதமர் இக்கேடாவுக்கு அனுப்பிய ஒரு செய்தியில், சீன தற்பாதுகாப்புக்காகவே அணுகுண்டை உபயோகிக்கும் என்றும் தானுக முதலில் அதை உபயோகிக்காது என்றும் கூறியிருக்கிருர். சிரிய பிரதமருக்கு அவர் அனுப்பியுள்ள மற்ருேர் செய்தியில் அணு ஆயுத பயமுறுத்தலுக்கெதிராக தற்பாதுகாப்புக்காகவே சீன அணுகுண்டை உபயோகிக்கும் எனக் கூறியிருக்கிருர்.

---

## காமன்வெல்த் நலனில் புதிய பிரிட்டிஷ்பிரதமர் அக்கறை

### ஆலோசனை சபை ஒன்றைநிறுவமுயற்சி

லண்டன், அக். 20

ஐரோப்பிய பார்லிமெண்டரி சபையைப் போன்ற காமன்ஸ் ஆலோசனை சபை ஒன்றை நிறுவ பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. காமன்வெல்த் நாடுகளின் அரசியல் வாதிகளை மிக நெருக்கமான முறையில் கொண்டுவரும் பொருட்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இச்சபையின் தலைமைக்காரியாலயம் எங்கிருக்கும் என்பது பற்றி தெரியவில்லை. ஆனல் கொள்கையளவில் காமன்வெல்த் அரசாங்கங்களிடையே ஆலோசனை நடைபெற்றபின் இவ்விஷயம்பற்றித் தீர்மானிக்கப்படும்.

காமன்வெல்த் அபிவிருத்திக்கும், வர்த்தகத்திற்கும் புதிய சக்தியளிக்கும்பொருட்டு புதிய பிரதம மந்திரி திரு. வில்சன் காமன்வெல்த் அபிவிருத்தி சபை ஒன்றையும் ஏற்றுமதி சபை ஒன்றையும், பென்ஷன் உரிமைபெறும் காமன்வெல்த் சேவை ஒன்றையும் நிறுவ உத்தேசித்திருக்கிருர்.

சைப்பிரஸ், தென்ரொடீஷியா ஆகிய இரு பிரதான காமன்வெல்த் பிரச்சினையில் புதிய அரசாங்கம் துரிதமான தீவிர கவனம் செலுத்திவருகிறது.

---

## "ஆசியாவுக்கு அணுகுண்டு அபாயம் ஏற்பட்டிருக்கிறது"

### இந்தியப் பிரதமர் சாஸ்திரியின் தேசிய ஒற்றுமை தினச்செய்தி

புதுடில்லி, அக். 20

சீன அணுசோதனை நடத்தியிருப்ப மூலம் ஆசியாக்கண்டத்திற்கு அணுஆயுத ஆபத்தை உண்டுபண்ணியிருக்கிறது என பிரதமர் சாஸ்திரி, இன்று தேசிய ஒருமைப்பாடு தினத்தை முன்னிட்டு நிகழ்த்திய வானெலிப் பிரசங்கத்தில் கூறினர்.

சீனர்கள் மாபெரும் போர் யந்திரத்தைத் தோற்றுவித்து இதர நாடுகளைப் பயன்படுத்த முயல்கிருர்கள் என்றும் அவர் கூறினர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் 1962 அக்டோபர் 20-ந் திகதி சீனர்கள் இந்தியாவைத் தாக்கியபோது மக்கள் காட்டிய அதே ஒற்றுமையை மீண்டும் நிலைநிறுத்தவேண்டுமென சாஸ்திரி கூறினர். இந்தத் தாக்குதலின்போது இந்திய ராணுவம் நடத்திய வீரப் போராட்டமும் தியாகமும் நன்றியுடன் நினைவுகூரத்தக்கது என்றும் சீன அபாயம் இன்னும் நீங்காதிருப்பதால் மக்களிடையே அன்றைய ஒற்றுமை என்றும் தேவையென்றும் இந்தியப் பிரதமர் கூறினர்.

சீனர்களின் சவாலை ஒற்றுமையோடு ஏற்கவேண்டும். யுத்தம் மூண்டால் அது உலகம் முழுதும் பரவிவிடுமென்பதை அலட்சியம் செய்யமுடியாதென்றும் அவர் கூறினர்.

---

## அணுகுண்டு உற்பத்தியை சீன நிறுத்தாதாம்

பீகிங், அக். 20

சீன அணு சோதனை நடத்தியதை ஜப்பானிய மக்களும், ஆசிய மக்களும் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள் என்றும் இந்த மக்களின் வெறுப்புக்கே சீன ஆளாகும் என்றும் இங்கு விஜயம் செய்துள்ள ஜப்பானிய நல்லெண்ணக் கோஷ்டியின் தலைவர் ஒரு வைபவத்தில் கூறினர். இவர் ஜப்பானிய சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய சீனத் தலைவர் ஒருவர் அணுக்குண்டு உற்பத்தியில் சீன தொடர்ந்து ஈடுபடும் என்றும் அதை நிறுத்தமுயல்வது வீண் என்றும் குறிப்பிட்டார்.

இது 'சீனவின் அகங்காரப் போக்கு' என ஜப்பானிய சோஷலிஸ்ட் கட்சி அறிவித்திருக்கிறது.

சீனவின் சோதனையில் ஏற்பட்ட கதிரியக்கம் பலநாடுகளில் தென்பட்டதாய் அமெரிக்க அறிவிப்பு ஒன்று கூறுகிறது. சீன அணு சோதனையின் விளைவாக தென்கொரிய ஒலிபரப்பு 4 முறை நின்றதாகவும் அறிவிக்கப்பட்டது.

---

## நவீன இந்திய ராணுவம் விரைவாக உருவாகிவருகிறது

### கடந்த 2 வருட சாதனையின் விபரம்

புதுடில்லி, அக். 20

இந்திய ராணுவத்தை நவீனப்படுத்தும் ஐந்தாண்டுத் திட்டத்தில் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது.

8 லட்சத்துக்கு மேற்பட்ட நவீன ஆயுதப்படைகளைக் கொண்டிருப்பதும, 45 விமானப்பிரிவுகளைக் கொண்டிருப்பதும், கடற்படையை புதிய நவீன கப்பல்களைக் கொண்டு பலப்படுத்துவதும் அத்திட்டத்தின் நோக்கம்.

10 லட்சத்துக்கு மேற்பட்டோர் ராணுவத்தில் சேர விண்ணப்பித்ததில் 3 லட்சம் வீரர்களும், 10,000 அதிகாரிகளும் தெரிவுசெய்யப்பட்டதாயும், ரைபிள்கள், நீண்ட தூரம் சுடும் மோட்டார் பீரங்கிகள், சீரான துப்பாக்கிகள் ஆகியவை ராணுவத்திற்குப் பழக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

மேலும் விமானப் படைக்கு விமானங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. உள்நாட்டு விமான உற்பத்தியைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

வட எல்லையில் ரடார் கருவிகள் அமைக்கும் வேலை இவ்வாண்டுக்குள் பூர்த்தியாகுமென அறிவிக்கப்படுகிறது.

கடற்படையை வலுவாக்கும் திட்டத்தின்படி பம்பாயில் போர்க்கப்பல்கள் கட்டப்படவிருக்கின்றன. அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் ஆயுதங்கள பெறுவதற்கான ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டிருக்கின்றன.

---

## பிரிட்டிஷ் மந்திரி சபையில் இரு புட் சகோதரர்கள்

லண்டன், அக். 20

சைப்ரஸின் முன்னுள் கவர்னரும், முன்னுள் ஐ. நா. தர்மகர்த்தாசபையில் பிரிட்டிஷ் பிரதிநிதியாக இருந்தவருமான சர் ஹியூ. புட் வெளிவிவகார இலாகாவில் ராஜாங்க மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்கவிருக்கும் ஹியூ.புட், ஐ. நா. வில் நிரந்தர பிரிட்டிஷ் பிரதிநிதியாகக் கடமையாற்றுவார்.

தலைசிறந்த வழக்கறிஞரான சர் ஹியூ புட்டின் சகோதரர் டிங்கன்புட் கியூ. ஸி. சொலிஸிட்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

மற்ருேர் பிரபல வழக்கறிஞர் திரு. எல்வின் ஜோன்ஸ் கியூ. ஸி. அட்டோர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

முன்னுள் கிளாஸ்கோ பாடசாலை ஆசிரியரான 67 வயதுள்ள மிஸ் மார்கரட் ஹெர்பிஸன் பென்ஷன், தேசிய இன்ஸூரன்ஸ் மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

---

## பிரிட்டிஷ் ராக்கெட்

லண்டன், அக். 20

பிரிட்டன் தனது 2-வது ராக்கெட் ஒன்றை வெற்றிகரமாக பரீட்சித் திருக்கிறதென்றும் இது 8 நிமிடங்களில் 1000 மைல் தூரத்தைக் கடந்தது என்றும் அறிவிக்கப்பட்டது.

---

தென்ரொடீஷியா

## தொழிற்கட்சி ஆப்பு

லண்டன், அக். 20

தென்ரொடீஷியாவில் ஓரு மைனரிட்டி அரசாங்கத்திடம் சுதந்திரம் அளிப்பதை தொழிற்கட்சி அரசாங்கம் மறுத்திருக்கிறது.

---

## ம. பி.யில் வகுப்புக்கலகம்

ராவல்பிண்டி, அக். 20

இந்தியாவின் மத்திய பிரதேச ராஜ்யத்தில் நேற்று வகுப்புக் கலவரம் ஏற்பட்டதாயும் பல கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்றும் இதன் விளைவாக சில இடங்களில் 144-வது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

---

## ஐ. நா. பொது சபை ஒத்திவைக்கப்படும்?

நியுயோர்க், அக். 20

திரு. குருஷ்சேவ் ராஜினமாவைத் தொடர்ந்து, மற்றும் பல சர்வதேச அபிவிருத்திகளைத் தொடர்ந்தும் வருகிற நவம்பர் 10-ம் திகதி கூடவிருந்த ஐ. நா. பொதுச் சபைக்கூட்டத்தை ஒத்திவைக்க நியுயோர்க்கில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. லத்தீன் அமெரிக்க நாடுகள் இந்த முயற்சியில் தீவிரமாய் இருப்பதாயும் சபை ஒத்திவைக்கப்படுவது அநேகமாக நிச்சயம் என்றும் அறிவிக்கப்படுகிறது. ஐ. நா. படை நடவடிக்கைக்கு ரஷ்யா தரவேண்டிய 5 கோடி டாலர் கடன் விஷயத்தில் அந்நாடு பிடிவாதமாய் இருந்தால் பொதுச் சபையில் வாக்களிப்பு உரிமையை அது இழக்கும். ஆனல் புதிய ரஷ்யத் தலைமை இவ்விஷயத்தில் மாறுபட்டபோக்கை காட்டக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# யாழ். முஸ்லிம் வாலிபர்களின் இரண்டுநாள் கலைவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாண முஸ்லிம்வாலிப முன்னேற்றச் சங்கத்தினரின் கலைவிழா சென்ற சனி, ஞாயிற் றுக்கிழமைகளில் யாழ்ப்பா ணம் உஸ்மானியாக் கல்லூரி முன்றலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

முதல்நாள் நிகழ்ச்சியில் ஜனாப் யு எம். ஐத்துறூஸ் கொடியேற்றி வைத்தார். இத னைத் தொடர்ந்து எஸ். எம். அசனுலெப்பை புலவர் அரங் கில் நிகழ்ச்சிகள் ஆரம்பமா னது. யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக மிகவும் சிறப்பான முறையில் நடைபெறும் முஸ் லிம் கலைவிழா இதுதானெ ன்று அவர் தனது தலைமையுரை யில் கூறினர். ஜனாப் ஏ. பி. ஏ. சாலி வரவேற்புரை நிகழ் த்தினர். ஜனாப் எம். ஈ. ஷாஹுல் வாழ்த்து மடல் வாசித்தார்.

ஆலி ஜனாப் என். எம். முகம்மதுமீரான் முஹியித்தீன் ஆலிம் அமீர், ஜனாப எம். எம். எம். ஜனாப வி. முத்து ராஜா ஆகியோர் உரைநிகழ்த் தினர்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி யில் எஸ் எம். மீரான்சாகிபு கொடியேற்றி வைத்தார். காதி எஸ். எம். அபூபக்கர் அரங்கத்தில் உரை அரங்கம் இடம் பெற்றது. மாவட்ட நீதி பதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் உரை அரங்கத்துக்குத் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில், வய தில் குறைந்த இளைஞர்கள் மெச்சத்தக்க விதமாகப் பல நிகழ்ச்சிகள் இடம்பெறக் கூடிய விதத்தில்ஒருகலை விழா வைநடத்தியது பெருமைக்கு ரியதொன்று என்று கூறினர்.

அல் ஆலிம் மௌலவி ஏ எம். அப்துல் றசாக் ஜமாலி ஆலி ஜனாப் என். எம். முகம் மதுமீரான், என். எச். எம். அப்துல் றசாக், ஜனா எம். எஸ். அகமது, ஜனா ஏ பி ஏ. சாலி, ஏ எம். எஸ். முஹி யித்தீன் ஆகியோர் உரைநிகழ் த்தினர். ஜனாப், ஏ. எம்.எஸ் சாகிபு நன்றியுரை கூறினர்.

எம். ஏ. சி. அப்துல்காதர், அரங்கத்தில் ஜனாப் ஏ. எம் எஸ், முஹிபித்தீன் தலைமையில் இசை அரங்கம் இடம்பெற் றது. செல்வன் எம். எம்.எஸ். அப்துல் காதர் கிராஅத் ஓதி னர். செல்வன் எம். ஏ றஸின் வரவேற்புரை நிகழ்த்தினர்.

இளங்கீரன் தலைமையில் நாடக அரங்கம் இடம்பெற் றது. இலங்கை வானொலியை சேர்ந்த ஜனாப் எம். எம், மக் தீன் எழுதித் தயாரித்த 'கொழும்பு மாப்பிள்ளை' மற் றும் 'கொழும்பு அ ஹோம்' ஆகிய நாடகங்கள் நாடக அர ங்கில் இடம் பெற்றன.

கிண்ணியாவைச் சேர்ந்த இசை வல்லுனர் எஸ், ஏ. லெப்பைக்கு "ஈழத்து இஸ் லாமிய இசை அரசு" என் னும் பட்டத்தை குவாஸி எம். எம். சுல்தான் விழாவின் போது சூட்டினர்.

## மரணவிசாரணை அதிகாரி நியமனம்

ஊர்காவற்றுறை, செவ். வேலணை மேற்கு முன்னாள் தலைமைக்காரர் திரு ச. மகா லிங்கம் வேலணைத் தீவுக்கு திடீர் மரணவிசாரணை அதி காரியாக அரசினரால் நியமிக் கப்பட்டுள்ளார்.

## போக்குவரத்து சீர்கேடு

யாழ்ப்பாணம், புதன் சுழிபுரம் அருட்பெருமை வாய்ந்த பறுளை முருகமூர்த்தி, விநாயகர் ஆகிய ஆலயங் களுக்குச் செல்லும் பறுளை வீதி மிகவும் மோசமான நிலையி லிருக்கிறது. வீதியை திருத் தும் முயற்சியில் சுழிபுரம் கிராமசபைத் தலைவர், நாவலர் சனசமூகநிலையக் காரியதரிசி திரு. சு. சியானந்தன் ஆகி யோர் ஈடுபட்டுள்ளனர். பாதை சரியில்லாததால் போக்குவரத்து மிகவும் கஷ்ட மான நிலையிலுள்ளது. மழை காலத்தில் கோவிலுக்குப் போகும் மக்கள் மிகவும் கஷ் டப்படுகிறார்கள்.

## சாவகச்சேரி கோர்ட்டில் தனுஷ்கோடி சரண்!

சாவகச்சேரி, புதன் கிளிநொச்சி, இராமநாத காலனியில் ஆறுமுகம் என்ப வரை கொலை செய்து அவரது 17 வயது மகள் பூரணத்தை கடத்திய சம்பவத்தில் சம்பந் தப்பட்ட சந்தேகநபர்களில்ஒரு வரான வைத்திலிங்கம் தனுஷ் கோடிநேற்றுமுன் தினம்சாவகச் சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட் டில் புறக்டர் திரு. ஆர். டி. சிவகுரு மூலம் சரணடைந் தார்.

சரணடைந்த நபரை ரிமாண் டில் வைக்கும்படி உத்தர விட்டு இம்மாதம் 21-ந் திகதி கிளிநொச்சி கோர்ட்டில் ஆஜ ராகும்படி சாவகச்சேரி மாஜிஸ் டிரேட் தெரிவித்தார்.

# 'அடிப்படை பாடத்திட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது'

யாழ்ப்பாணம், புதன் "எதிர்காலத்தில் எமது நாட்டு இளம் சந்ததியினர் பெரும் நன்மையைப் பெறக் கூடிய விதத்தில் கல்வித்துறை யில், பாடத்திட்டத்தில் அடிப் படை மாற்றங்களைச் செய் திருக்கிறோம். புதிய பாடத் திட்டங்களை பாட போதனை யில் நீண்டகால அனுபவமும், ஒரு பாடத்தில் திறைமையான தேர்ச்சியும் பெற்றவர்களே இப் புதிய பாடத்திட்டத்தை தயாரிக்கும் பணியில் ஈடுபட் டுள்ளார்கள்."

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் வித்தியாதி பதி திரு. ஈ. ஏச். டி. அல் விஸ் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது பேசகை யில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. இ. நல்லதம்பி தலைமை யில் நடைபெற்ற விழாவில் திரு. அல்விஸ் மேலும் கூறிய தாவது:

"ஒரு பகுதியின் தேவையை அனுசரித்து அங்குள்ள பாட சாலையின் தகைமை முதலிய வற்றை மனதில்கொண்டுதான் மகாவித்தியாலயமாக எது வரத் தகுதியுள்ளது என்று பிரதேச உதவி வித்தியாதிபதி ஆவனசெய்வார். ஆகவே மேடையில் நின்று உங்கள் கல்லூரியை மகாவித்தியாலய மாககுவேன் என்று உறுதி தரத் தயங்குகிறேன்; என்ரு லும் உங்கள் பாடசாலை மாண வர்கள் - ஆசிரியர்கள் - பெற் றோர்கள் ஆகியோர்களது ஒற்று மையைப்பார்த்துப் பூரிப்படை கிறேன்.

### பெற்ரோரின் கடமை

தேசியவருமானத்தில் ஐந் தில் ஒரு பங்கை கல்விக்கென அரசாங்கம் ஆண்டுதோறும் ஒதுக்குகின்றது. இப்பணத் தில் 8,000 அதிகமான பாட சாலைகளுக்கு இடையே பகிர் ந்து அளிக்கப்படவேண்டும். இது மிகவும் கடின மான கடமையாகும். காரணம் எல்லாப் பாடசாலை களும் சகல வசதிகளும் உள் ளவையாக மாற்றியமைக்க இப்பெருந் தொகைப் பணம் போதாதிருக்கின்றது. எனவே தான் பெற்றோர்களின் ஒத்து ழைப்பு அவசியமெனத் தென் படுகிறது. பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பிவைப்பது மாத்திரம் பெற்றோரின் கடமை என்று கூறமுடியாது. தங்கள் பிள்ளைகள் படிக்கும் பாட சாலைகளிலும் அக்கறை காட்ட வேண்டும். பாடசாலைக் கட்ட டங்களில் அக்கறை காட்ட வேண்டும், இதுவும் பெற்றோ ரின் கடமையாகும். இத்துறை யில் இணுவில் கிராமமக்கள் பெருமளவு ஆர்வம் காட்டி, குறுகிய காலஎல்லைக்குள்,அரு மையான இப்பாடசாலையை அரசாங்கம் ஒதுக்கிய பண த்தைவிட அதிக பெறுமதியுள் ளதாக அமைத்து வெற்றி விழா எடுப்பது போற்றுதற் குரியது.

ஆசிரியர் திரு. க. கதிர வேல் பேசுகையில், இப்பாட சாலை அமைந்துள்ள ஸ்தானம் மிகவும் முக்கியமானதென்றும் அயலிலுள்ள தாவடி, சுதுமலை ஆகிய இடங்களில் சர்வகலா சாலைப் புகுமுக வகுப்பு உள்ள பாடசாலைகள் இல்லையென் றும் இப்பாடசாலையை ஒரு மகாவித்தியாலயமாக்கித் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தாரால் வித் தியாதிபதிக்கு அளிக்கப்பட்ட வரவேற்புரையில், கந்தசாமி கோவிலுக்கும், பிள்ளையார் கோவிலுக்கும் மத்தியிலமைந் திருக்கும் இப்புனிதமிக்கப் பாடசாலையை மகாவித்தியால யமாக்கித் தரும்படி கேட்டுக் கொண்டனர்.

## போதிவிருட்சம் இந்தியா சென்றது

கொழும்பு, செவ்வாய் வெளிவிவகார நிரந்தரக் காரியதரிசி திரு. என். கியூ. டயஸ் இன்று அனுராதபுரம் மகாபோதி விருட்சக் கிளை ஒன்றை விசேஷ விமானம் ஒன்றில் புதுடில்லிக்கு எடுத் துச்சென்றார், அடுத்த வாரம் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநா யக்கா இதை இந்திய அர சாங்கத்திடம் அன்பளிப்புச் செய்வார்.

## கடத்தல் முயற்சி

காங்கேசன்துறை, செவ். வல்வெட்டித்துறையில். நேற் றிரவு 8 மணிக்கு இந்தியா விற்கு சட்டவிரோதமாக 74 பாக்கு மூடைகளை ஏற்றிக் கொண்டிருக்கையில், காங்கே சன்துறை பொலிசினருக்கு கொடுக்கப்பட்ட தகவலின் பேரில் பொலிசார் அந்த இடத் திற்கு விரைந்து சென்றார்கள், பொலிசாரைக் கண்டதும், இரண்டுவள்ளங்களும்,இரண்டு கட்டுமரங்களும் ஏத்தியபாக்கு மூடைகளுடன் தப்பிவிட்டனர். முருகுப்பிள்ளை என்பவர் வீட் டில் பொலிசார் 86 பாக்கு மூடைகளைக் கைப்பற்றினர்.

"எனது தொண்டையில் சிறிது வேப்பர் கிறீமைத் தடவினேன். தொண்டை எரிச்சலும் தடிமனுக்குரிய அறிகுறிகளும் அடுத்தநாள் மாயமாய் மறைந்துவிட் டன."

—திருமதி எஸ். டபிளியு




உங்கள் குழந்தையின் நன் மைக்காக எப்பொழுதும் கிறேசன்ஸ் வேப்பர் கிறீ மையே கேட்டுவாங்குங்கள். எல்லா மருந்துக் கடைகளி லும், பலசரக்குக் கடைகளி லும் கிடைக்கும்.

புத்துணர்ச்சியுடன்
திகழ கோயாவின்
புத்தம் புதிய
திவ்யமான,
மெல்லினிய
மணங்கமழும்
என்ட்டைஸ்
பாவியுங்கள்






ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத் தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சி யுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்ட்டைஸ் பாவியுங்கள். அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.

மற்றும் லவ் எப்பேர் பாஸ்போர்ட்
ப்ளாக் ரோஸ் கார்டீனியா
நம்பர் 5 சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்

666

தீபாவளிப் பண்டிகையை
முன்னிட்டு
விசேஷமலிவுவிற்பனை
19-10-64 தொடக்கம் 2-11-64 வரை.
இன்றே விஜயஞ் செய்யுங்கள்!
முனீர்ஸ்
79-81, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# வானொலி நிகழ்ச்சிகள்

புதன் 21-10-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு — "யூகோஸ்லேவியா அனுபவங்கள்" — என். நகுலேஸ்வரன், 7-20 வயலின் — பி. எஸ். மணிஐயர், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 உங்கள் பிரச்சினை, 9-45 பாட்டு, 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 வாத்தியஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 இசைக் கோவை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு, 2-40 ஜெயபேரிகை.

மாலை 5-15 புல்லாங்குழல், 5-45 ஆகாஷ்வாணி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 செய்தி அரங்கம், 7-45 இசைநாடகம் — 'பிணி தீர்க்கும் மருந்து', 8-00 திரைப்படஇசை, 8-30 இம்மாதப்பாடல், 8-35 பொன்னெளிர் பாரதம் — இசை நிகழ்ச்சி, 8-45 குரல் இசை, 9-15 தாளவாத்தியக்கச்சேரி, 9-45 இசைமாலை, 10-00 புல்லாங்குழல்.

—


ஸ்ரீ மனோகரா

(யாழ்ப்பாணம்) போன்: 485

6-30 காட்சி மாத்திரம்

சம்பூர்ண

மகாபாரதம்

இரவு 9-30 மாத்திரம்

பியா மிலன் கி யாஸ்

(ஹிந்தி)

PIYA MILAN KI AAS



REGAL — JAFFNA

NOW SHOWING

Silvana Mangano

IN

BITTER RICE

From Friday 23rd Hercules


## கடையை உடைத்து திருடினர்

காங்கேசந்துறை, செவ்.

பத்தை மேனியைச் சேர்ந்த வல்லிபுரத்திற்கு சொந்தமான கடையின் பின் கதவை உடைத்து உள்சென்று ரூபா 38 ரெக்கப்பணம், இனிப்பு வகைகள், டோர்ச்லைற், பவுண்டின்பேனை முதலிய பொருட்களை திருடியதாகக் கொடுத்த தகவலின் பேரில் காங்கேசந்துறை பொலிஸைச் சேர்ந்த ஜே. ஏ. அபேதுங்கா, பாலசிங்கம் கணேஷ் ஆகிய இருவரையும் கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளார். மேலும் இது சம்பந்தமாக மூர்த்தி என்பவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

—

## சாராயம் பறிமுதல்

வல்வெட்டித்துறை, செவ்.

நெல்லியடியைச் சேர்ந்த நாகமுத்து சின்னத்தம்பி என்பவர் 14 போத்தல் சாராயத்தை வல்வெட்டித்துறை உடுப்பிட்டி பாதையால் காரில் கடத்திச்செல்ல முயற்சிக்கையில் வல்வெட்டித்துறை பொலிஸ் சார்ஜன்ட் எம். பி. வேலு சந்தேகத்தின் பேரில் காரை மறித்து சோதனையிட்டபோது 14 போத்தல் சாராயம் இருக்கக்காணப்பட்டது. சார்ஜண்ட் சாரதியைக் கைது செய்தார். கார் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சாராயம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## "கோடரியை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரம் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார். இரண்டாவது எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினம் திரு. வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார்.

நல்லதங்காள் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

கடைசியாகச் சாட்சியமளித்தவர் எனது கணவர். சம்பவம் நடந்ததினம் இரவு 8 மணிக்கு நான் எனது கணவருடனும் பிள்ளைகளுடனும் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் எனது மச்சாளும் மனைவியும் வீட்டிற்கு வெளியில் கதைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சில ஆட்டைப் பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தார்கள். ராசரத்தினத்திற்குச் சொந்தமான ஆடுகள் வீட்டு வளவிற்குள் நிற்பதாகக் கூறினார்கள்.

ஆடுகளைப் பிடித்துக் கட்டும்படி ராசரத்தினத்திடம் கூறச்சொல்லி, முனியம்மா காலஞ்சென்றவரிடம் கூறினார். ராசரத்தினத்தை எதற்காகப் பேசியதாக ராசம்மா கேட்டார், ராசம்மா வீட்டுக்குப் பக்கத்துக் காணியில் வசிப்பவர்.

சிறிது நேரத்தால் ராசரத்தினம் வீட்டு வளவுக்குள் வந்தார். இந்நேரத்தில் நான் வெளியில் வந்துவிட்டேன். முத்துசாமி என்று ராசரத்தினம் கூப்பிட்டு எனது ஆடுகள் எங்கேயும் நிற்கும். எதற்காக என்னைப் பேசினாய் என்றார். அதன்பின் ராசரத்தினம் முத்துசாமியைக் கோடரியால் வெட்டினார் அந்த வெட்டு தலையில் விழுந்தது. இரண்டு கைகளாலும் கோடரியை மேலே உயர்த்தி வெட்டினார். உடனே காலஞ்சென்றவர் இரண்டடி பின்சென்று நிலத்தில் விழுந்தார். பின் நாலைந்து பேர் வந்து முத்துசாமியைப் பொல்லால் தாக்கினார்கள். அதன்பின் முனியம்மா வந்து தனது கணவனை மேலே தூக்கினார். உடனே இரண்டாம் எதிரி நடராசா, எதற்காக மேலே உயர்த்துகிறாய் என்று கூறிப் பொல்லால் ஒருதடவை அடித்தார். அந்த அடி கையில் விழுந்தது. எனக்கு மற்றவர்களைத் தெரியாது. அதன்பின் ஓடிவிட்டார்கள். அன்று நல்ல நிலவு வெளிச்சம் இருந்தது. அந்த வெளிச்சத்தில ஆட்களை அடையாளம் காணக்கூடியதாயிருந்தது. எனது வாக்குமூலம் இரவு 11-30 மணிக்கு பதியப்பட்டது.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களான திருவாளர்கள் எம். பாலசுந்தரமும், வி. என். நவரத்தினமும் சாட்சியைக் குறுக்குவிசாரணைசெய்தார்கள்,

மேல்விசாரணை 2-ந் தேதி திங்கட்கிழமைவரை ஒத்தி வைக்கப்பட்டது.——

## வேலணைக் கிராமசபை உத்தேச வரவு-செலவு

ஊர்காவற்றுறை, செவ்வாய்

வேலணை கிராமசபையின் புதிய வரவு-செலவு தயாரிக்கப்பட்டு, அண்மையில் தயாரிக்கப்பட்ட விசேட கூட்டத்தில் அங்கத்தவர்களின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளது.

தலைவர் திரு. பி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் 1964-ம் ஆண்டுக்குரிய சனசமூகநிலைய நன்கொடையை கொடுக்க வேண்டும் என்ற திர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய வருடத்திற்கான உத்தேச வரவு - செலவு அங்கத்தவர்களின் பார்வைக்கு விநியோகம் செய்யப்பட்டது. கிராமசபை எல்லைக்குள் விளையாட்டு மைதானம் அமைக்கவும், காலைஸ்தானம் நிறுவவும் வரவு - செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதை அங்கத்தவர்கள் பாராட்டிப் பேசினர். 12929 ரூபா 86 சதம் செலவாகக் காட்டி 639 ரூபா 84 சதம் மிச்சப்படுத்தும் திட்டமாகப் புதிய வரவு-செலவு தயாரிக்கப்பட்டுள்ளது

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

சுழிபுரம், செவ்.

சித்தங்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலையத்தினரின் 8-வது ஆண்டு நிறைவு விழா வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற திரு. நா. பேரம்பலம் விழாவுக்கு தலைமை வகித்தார்.

வட்டுக்கோட்டை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், சமூகத்தின் முன்னேற்றம் இளைஞர் கையில் தான் இருக்கின்றது என்றும் சமூகம் முன்னேற வேண்டுமானால் இளைஞர் உள்ளங்களில் தொண்டு செய்யும் நல் நோக்கு ஏற்பட வேண்டும் என்றும் மற்றவர்களுக்கு தொண்டு செய்வதன் மூலம் தான் நாம் முன்னேறலாம் என்றும் குறிப்பிட்டார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், திரு. சோமசேகரம், வித்துவான் புலவர் வேல்மாறன், திரு. வேதராசா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. வே. தம்பையா, உபதலைவர்: திரு. வி. தங்கராசா, செயலாளர்: திரு வே கந்தசாமி, உப செயலாளர்: திரு. நா. க. தங்கரத்தினம், தனதிகாரி: திரு. அ. கந்தசாமி பரிசோதகா திரு வீரசுப்பிரமணியம் 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

—

## றேயல் கிளப் வெற்றியீட்டியது

காங்கேசன்துறை, செவ்வாய்

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரிக்கும், காங்கேசன்துறை றேயல் கிளப்புக்கும் இடையில் நேற்று நடேஸ்வராக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் றேயல் கிளப் (4-1) கோல்களால் வெற்றியீட்டியது.

போட்டி ஆரம்பமாகி 25 நிமிடங்களுக்குப் பிறகு றேயல் கிளப் கோஷ்டி ஒரு கோலைப் போட்டது. இடைவேளைக்குப் பின் போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது.

ஆசிரியர் திரு. பரஞ்சோதி மத்தியஸ்தம் வகித்தார்.


JAFFNA COLLEGE
UNDERGRADUATE
DEPARTMENT

GAQ, GSQ, B.Sc. Ceylon Courses.

Applications for admission to the G A Q, G S Q., and B Sc (Ceylon) External courses will be received up to Monday, 26 th October. Forms of Application and copies of the Prospectus may be obtained from the Office.

Registrar

Vaddukoddai. 951



### வரி விளம்பரம்

**புத்திரபாக்கியம்**

பெண்களில் மலடு கிடையாது. புத்திரபாக்கியம் இல்லையே என்று கவலை இனி வேண்டாம். நூற்றுக்கணக்கானோர் என்னிடம் மருந்து சாப்பிட்டு பிள்ளையும் பெற்றிருக்கிறார்கள். பொ. செல்லையா, ஆயுர்வேத வைத்தியர், சுந்தர் மடம், யாழ்ப்பாணம். 882

**விற்பனைக்கு**

இரும்புத் தொழில், வார்ப்புத் தொழில் செய்பவர்கள் ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று உலைமுகங்களுக்குப் பாவிக்கக்கூடிய மின்சாரத்தில் இயங்கும் புதிய துருத்தி ஒன்று விற்பனைக்கிருக்கிறது. கலாசோதி இன்டஸ்றீஸ், 160 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1086


## ஊர் மன்ற கட்டிட திறப்புவிழா

சுழிபுரம், செவ்வாய்

வட்டுக்கோட்டை புதிய ஊர் மன்ற கட்டடத்தை இன்று காலை 9 மணிக்கு லடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. சி மாணிக்கவாசகர் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். சங்கரத்தை சந்திக் கருகாமையில் புதிதாக அமைக்க பட்ட இக் கட்டிடம் முன்பு சிலகாலமாக வட்டுக்கோட்டை அங்காடியாக பாவிக்கப்பட்டது, மக்களின் பாவனை குறைவாக இருந்ததால் கட்டிடத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, தற்போது வட்டுக்கோட்டை ஊர்மன்ற அலுவலகமாக மாற்றியுள்ளனர்.


மங்களகரமான 4வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

குயின்ஸ் (நுகேகொடை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (சீர்கொழும்பு)

வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)



எம். ஜி. ராமசந்திரன் - சரோஜாதேவி

மற்றும் பலர் நடிக்கும்

பணக்கார குடும்பம்


## திருமண அழைப்பு

பேரன்புடையீர்!

நிகழும் குரோதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 7-ம் நாள் (23-10-64) வெள்ளிக்கிழமை இரவு 1-30 மணிக்கு மேல் 2-30 மணிக்குள் வரும் சிங்க லக்கினத்தில்,

| என் செல்வ மகன் திருநிறைசெல்வன் இரகுநாத முதலியார் M.Sc. அவர்களுக்கு | எங்கள் திருமகள் திருநிறை செல்வி சாந்தாதேவியை |
|---|---|

கன்னிகாதானம் செய்துகொடுப்பதற்குத் திருவருள் துணை கூட்டியமையால், அச்சமயம் சுற்றமும் நட்பும் சூழச் சமூகமளித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

மு கணபதிப்பிள்ளையும் துணைவியாரும்

திருமதி வ. செல்லம்மா, (உரிமையாளர், ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை)

17, பிறவுண் வீதி, 17/1 ஜயனார் கோவிலடி,

நீராவியடி. வண்ணார்பண்ணை.


"தீபாவளிக்காக பிரத்தியேகம்"

புதிதாக வரவழைக்கப்பெற்ற அழகிய

கண்கவரும் வர்ணங்களில்

கைத்தறி சேலைகள்

இவைகளை வாங்கி

உள்ளூர் உற்பத்தியை ஆதரியுங்கள்

விலைகள் ரூபா 19-50 தொடக்கம்

டயரும்ஸ்

54-60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# மீன் பிடிக்கச் சென்ற படகும் மீனவர்களும் திரும்பவில்லை

மாவிட்டபுரம், செவ். மயிலிட்டிக்கரையிலிருந்து சென்ற 18-ம் திகதி மாலை ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 25,000 ரூபாய் பெறுமதியான இயந்திரப்படகும் அதில் சென்ற நால்வரும் இன்னும் கரை திரும்பவில்லையென்று இன்றுகாலை காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுபற்றிக் கூறப்படுவதாவது: மயிலிட்டியைச் சேர்ந்த பிள்ளையார்குட்டி என்பவருக்குச் சொந்தமான 25000 ரூபா பெறுமதியான "பொன்னம்பான்" என்ற இயந்திர மீன்பிடிப்படகில் 18-ம் திகதி மாலை 3-30 மணியளவில் மீன்பிடிவலைகளுடன் மயிலிட்டியை சேர்ந்தவர்களான சி. அழகரத்தினம், க. கதிரவேலு பொன்னுச்சாமி, யோசேப் ஆகிய நால்வரும் மீன்பிடிக்கச் சென்றார்களாம். இவர்கள் நேற்றுக்காலை திரும்பியிருக்க வேண்டும். ஆனால் இவர்கள் இன்றுவரை வீடு திரும்பவில்லை.

இவர்களைத் தேடும் முயற்சியில் மயிலிட்டியைச் சேர்ந்த 2 இயந்திரப்படகுகள் ஈடுபட்டுள்ளன. காங்கேசன்துறைப் பொலிசார் கரையோரப்பகுதி பொலிஸ்நிலையங்களுக்கு காணமற்போனவர்களையும் மீன்பிடிப்படகையும் கண்டுபிடிக்குமாறு கோரியுள்ளார்கள், காணமல் போனவர்களின் உறவினர்கள் காரைநகர் கடற்படையினரிடமும் உதவிகோரியுள்ளதாகத் தெரிகிறது.

---

# மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

சென்னை, அக். 20

சென்னைக்கருகிலுள்ள மணலியில் அமைக்கப்படவிருக்கும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை பற்றி இன்னும் ஒரு மாதத்தில் முடிவு செய்யப்படும் என பெட்ரோலியம் மந்திரி ஹுமாயூன் கபீர் அறிவித்தார்.

---

# இந்திய மக்கள் பிரதிக்ஞை

புதுடில்லி, அக். 20

இன்று இந்தியாவெங்கும் கோடிக்கணக்கான மக்கள் தேசிய ஒற்றுமைப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டனர்.

சரியாக 2 ஆண்டுகளுக்கு முன் 1962ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ந் தேதி தான் சீனர்கள் இந்தியாமீது படையெடுத்தனர். சுதந்திரம், உறுதிப்பாடு ஆகியவற்றைப் பேணிக் காக்க மக்கள் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டனர்.

---

# சைவமகாசபை தீர்மானங்கள்

காரைநகர், திங்கள்

காரைநகர் சைவமகாசபையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

63-ம் ஆண்டு பரிசோதிக்கப்பட்ட கணக்கு அறிக்கையைப் பதிவு காரியஸ்தருக்கு அனுப்பிவைப்பதென்றும் முதியோர் கல்வியை புனருத்தாரணம் செய்வதென்றும் 50-ம் ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. தற்போதைய தலைவரான திரு. இ. நாகலிங்கத்துக்கு பொன்னாடைபோர்த்திக் கௌரவிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

விழாவின் உறுப்பினர்களாகத் திருவாளர்கள் அ. நாகலிங்கம், சோ. சின்னத்தம்பி, ஆ. முருகேசு, அ. சிவபாதம், க. வைத்திலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

---

# உள்நாட்டு மந்திரிக்கு எஸ். ஜே. வி. சூடு!

## "திருமலை நகரத் தலைவரிடம் நடந்துகொண்ட முறை சரியா?"

கொழும்பு, செவ்வாய்

திருக்கோணமலை நகராண்மைத் தலைவர் திரு. எஸ். சிவானந்தனை உள்நாட்டு ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. ஏ. பி. ஜெயசூரியா, ஒரு மாநாட்டுக்குத் தனது அலுவலகத்திற்கு அழைத்து, திரு. சிவானந்தனைப் பல உத்தியோகஸ்தர்கள் மத்தியில் சிறுமைப்படுத்தியதையும், அவமதித்ததையும் கண்டித்துத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மந்திரிக்கு ஒரு காரசாரமான கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் திரு. செல்வநாயகம் தெரிவித்திருப்பதாவது: "நீங்கள் ஒரு கோழைத்தனமான முறையிலும், ஒரு சிறு சர்வாதிகாரி போலவும், நடந்திருக்கிறீர்கள், நகராண்மைத் தலைவர் ஒருவரை அழைத்துவிட்டு அவரைப் பலர் மத்தியில் அவமதித்தது மதிப்புக்குரிய விஷயமாகாது. நீங்கள் பொறுமையுடன் இருந்து அவரின் கருத்தையும் கேட்காமல் உங்கள் மனநிலையை இழந்து ஒரு பட்டிக்காட்டான் மாதிரி நடந்திருக்கின்றீர்கள். தலைவர் கூறிய விஷயத்திலிருந்து உங்களுக்கு இதிலும் பார்க்கக் கடினமான ஒரு கடிதமே நான் எழுதியிருக்கவேண்டும். ஆனால் தற்பொழுது இது போதுமானதே. அவர் தான் பிரதிநிதிகளால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவரென்றும், ஆகவே அவர்கள் கூறுவதுபோல்தான் நடக்க வேண்டுமென்று கூறியிருந்தும் நீங்கள் அவரை திருக்கோணமலை சிறு தமிழரசுச் சர்வாதிகாரி என்று வர்ணித்திருக்கின்றீர்கள். உங்களிடம் உள்ள சட்டத்தினால் நீங்கள் வேண்டுமானால் ஒரு ஸ்தலஸ்தாபனத் தலைவரை விலக்கலாம். ஆனால் இப்படியாக நடந்துகொள்வதற்கு உங்களுக்கு ஒருவித உரிமையும் இல்லை. ஆகவே இந்த முறையை நான் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் எனது ஆட்சேபனையையும் தெரிவித்துக்கொள்கிறேன்"

---

# "கோடரியை மேலேஉயர்த்தி தலையில் வெட்டினர்"

## பரந்தன் கொலை வழக்கில் நல்லதங்காள் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

பரந்தன் கொலை வழக்கு சாவகச்சேரி மஜிஸ்டிரேட் கோர்ட்டில் நேற்றுக்காலை நீதிபதி திரு. ஹெர்பேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நல்லதங்காள் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் பரந்தவில் முத்துச்சாமி என்பவரைக் கோடரியால் வெட்டிக் கொலை செய்ததாக ராசரத்தினம், நடராசா ஆகியோர்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலாவது எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரம்

(5-ம் பக்கம் பார்க்க)

---

# பிறப்பு சாட்சி பத்திரத்தில் மாறுதல் செய்தாராம்

## 200 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

மாவிட்டபுரம், செவ்

மானிப்பாய் தெற்கைச் சேர்ந்தவர்களான சின்னப்பா அரசலிங்கம், அரசலிங்கம் அரசகிருஷ்ணன் ஆகிய இருவரும் மேற் கூறிய இரண்டாம் எதிரியாகிய அரசகிருஷ்ணனின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பிறந்த திகதியாகிய 29-11-35 ஐ 29-11-36 ஆக மாற்றியதாக சுன்னாகம் பொலிஸாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச். அத்துறுபாலு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது பொலிஸ் தரப்பில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் 2-ம் எதிரியை எஸ். எஸ். ஸி வகுப்பில் சேர்ப்பதற்கு அவர் 19 வயதிற்கு உட்பட்டவர் என்பதைக் காட்டுவதற்காக பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் 29-11-35ஐ 29-11-36 ஆக மாற்றியதாகவும், சம்பவநேரம் 19 வயதிற்குட்படாதவர்கள் இலவசக் கல்வி பெற முடியாதெனவும் கூறப்பட்டது. மேலும் 2-ம் எதிரி பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் வேலைக்கு மனுப் போட்டபோது தான் பொலிஸார் மேற்படி பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் மோசடி செய்யப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்ததாகவும் கூறப்பட்டது.

விசாரணையின் பின் நீதிபதி முதலாம் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 200 ரூபா அபராதம் விதித்தார். 2-ம் எதிரியை சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்தார்.

எதிரிகள் தரப்பில் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. ஆர். கணேஸ்துரை ஆஜரானார். சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி வழக்கை நடத்தினர்.

---

# பஸ்விபத்தில்சிக்கியவர் காலமானர்

சுழிபுரம், செவ்வாய்

மாதகல் ஆஸ்பத்திரியில் வேலைசெய்யும் ஆண்டி என்னும் தொழிலாளி, பஸ்வண்டி ஒன்றினால் மோதப்பட்டு யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் காலமானர். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் நடைபெற்றது.

---

# யேகோவாவின் சாட்சிகள்

## யாழ்ப்பாணத்தில் நாளை மகாநாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யேகோவாவின் சாட்சிகள் மாவட்ட மகாநாடு, நாளை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஆரம்பமாகின்றது. இப்படியான மகாநாடுகள் உலகின் ஏராளமான நாடுகளில் நடைபெற்றிருக்கின்றன. நாளை ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறும் இந்த மகாநாட்டில் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்தும் 200க்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

மகாநாட்டின் இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் பைபிள் விரிவுரைகள் நடைபெறும். வெள்ளிக்கிழமை காலை, விசேஷ நிகழ்ச்சியும் உண்டு. ஞாயிற்றுக்கிழமை பிற்பகல், இலங்கையில் உள்ள யேகோவாவின் சாட்சிகள் கிளை மேற்பார்வையாளர் திரு. ஸி. ஏ. தரஹா ஒரு சிறப்பு சொற்பொழிவாற்றுவார்.

---

# டாக்டர் பெரேராதான் தகுதி வாய்ந்த நிதி மந்திரி

## மல்வத்தை மகாநாயகதேரோ பாராட்டு

கொள்ளுப்பிட்டி, செவ்

நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவும் போக்குவரத்துமந்திரி திரு. அனில் முனசிங்காவும் கண்டிக்குச் சென்று மல்வத்தை மதபீடத் தலைவர் வண. அமுனுகம விபாசி மகாநாயக்க தேரோவையும் அஸ்கிரிய மதபீடத் தலைவரையும் சந்தித்தனர்.

மதபீடத் தலைவருக்கு மரியாதை தெரிவிக்குமுகமாகச் சென்ற இருமந்திரிகளும் மதபீடத்தலைவர்களுக்கு மலர்கள் அளித்து அஞ்சலி செய்தனர்.

நாட்டின் பொருளாதார நிலையைச்சீர்செய்வதற்கு டாக்டர் என். எம். பெரேராவைத் தவிர வேறு எவருமில்லையென்றும் டாக்டர் பெரேராவே நிதிமந்திரியாக இருக்கத்தகுதி வாய்ந்தவரென்றும் மல்வத்தை மகாநாயக்கதேரோ டாக்டர் பெரேராவைப் பாராட்டியதாகத் தெரிகிறது.

மரவரிமுறை யோசனைபற்றியும் பத்திரிகை மசோதாபற்றியும் மகாநாயதேரோவோ டாக்டர் என். எம். பெரேராவோ இச்சந்திப்பில் பேசவில்லையெனத் தெரிகிறது.

---

# மகாஜன கல்லூரி

மாவிட்டபுரம், செவ்வாய்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் யாழ் இந்துக் கல்லூரிக்குமிடையில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி 4—2 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. எஸ். சண்முகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---

# வடிசாராயம் வைத்திருந்தவருக்கு அபராதம்

மாவிட்டபுரம், செவ்.

சுன்னாகம் ஏழாலை மத்தியைச் சேர்ந்த மருதலிங்கம் பாலசுந்தரம் என்பவர் சட்டவிரோதமாக 32 திரும் வடிசாராயம் வைத்திருந்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எப். எச். அத்துறுபாலு முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி தான் குற்றவாளியென்று கூறவே நீதிபதி எதிரியை 200 ரூபாய் அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார். இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி வழக்கை நடத்தினர்.

---


# தேவை

கனிஷ்ட தராதரப்பத்திரமுடையவராயும், கணக்கு அனுபவமுள்ளவராயும், 25வயதுக்கு உட்பட்டவராயும், யாழ்ப்பாணத்தில் வசிப்பவராயும், ரூபா 150/- பிணை செலுத்தக் கூடியவராயுமான உபலிகிதர் தேவை. மாதச்சம்பளம் ரூபா 60/- சமீபத்திய இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களோடு 28-10-64-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

காரியதரிசி, யாழ். விவாக அந்தியகால க்ஷேமலாப நிதிச் சங்கம், 11 G, மொம்சாக் கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1040



உ

தொலைபேசி எண்: 7107 தந்தி: GEE PEE TEE

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!!

**தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பெற்ற**

பலவகையான புதிய ஜவுளித் தினிசுகளும் ஆகக் குறைந்த விலையில் சிறந்த பொருளாக வாங்கக்கூடிய இடம்

யாழ்ப்பாணம்

# ஞானபண்டிதன்

ஜவுளிக்கடை

ஒன்றேதான்

(கதிரேசன் கோவிலுக்கு முன்பாக உள்ளது)

சமுகங்கொடுங்கள்.

228, கே. கே. எஸ் ரோட், — யாழ்ப்பாணம்.



# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

பரிசளிப்புவிழா 1964

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்புவிழா 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை பி. ப. 6-00 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்தினர்கள்:

திரு. ரி. முத்துசாமிபிள்ளையும் பாரியாரும்

(பாரிஸ்டர்)

பழைய மாணவர், பெற்றோர், சிநேகிதர் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தார் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 6-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964- ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.